# ஷோராஷி எனும் திரிபுரசுந்தரி

## சாந்திப்பிரியா



இந்தியாவின் கிழக்குப் பகுதியான திரிபுரா மானிலத்தில் உள்ளது திரிபுரசுந்தரி ஆலயம். அதில் பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ள தேவியை ஷோராஷி தேவி என்றும் கூறுகின்றனர். உலகில் உள்ள ஐம்பத்தியொரு சக்தி ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும்.

அகர்தலாவில் இருந்து 58 கிலோ மீட்டர் தொலைவிலும், திரிபுராவில் உள்ள உதயபூரில் (ராஜஸ்தானில் உள்ள உதயபூர் அல்ல) இருந்து 3 கிலோ தொலைவிலும் உள்ளது இது. முதலாம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கூறப்படும் இந்த ஆலயம் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு மின்னல் தாக்கி பழுதடைய அதை அந்த நாட்டை ஆண்டு வந்த மன்னன் மீண்டும் புதுப்பித்தான்.

திரிபுரசுந்தரி தேவி பற்றி பல கதைகள் உள்ளன. பொதுவாக திரிபுரசுந்தரி என்றாலே லலிதா சஹஸ்ரநாமத்தில் காணப்படும் திரிபுர சுந்தரி தேவி என்றே நினைப்பார்கள். ஆனால் இந்த ஆலயத்தில் காணப்படும் திரிபுரசுந்தரி தேவியானவள் அந்த திரிபுரசுந்தரி அல்ல. இந்த ஆலயத்தினை குறித்து கூறப்படும் கூறப்படும் கதை இது. தஷ்ய யாகத்தில் ஏற்பட்ட அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் போன சிவபெருமான் தன் இறந்து போன மனைவியை தோளில் தூக்கிக் கொண்டு ஆடிக் கொண்டு போன பொழுது விஷ்ணு பகவான் அவள் உடலை தன் சுதர்சன சக்கிரத்தினை ஏவி வெட்டி விட அது 51 துண்டுகளாகி பல்வேறு இடங்களில் விழுந்த பொழுது இப்போது திரிபுராவில் ஆலயம் உள்ள மாதாபுரி எனும் இடத்தில் வலது கால் விரல் விழ அது சக்தி பீடமாயிற்று. அந்த ஆலயம் ஆமையைப் போன்ற அமைப்பில் எழுந்துள்ளதால் அதை கூர்மஸ்தான் எனவும் அழைக்கின்றனர்.

பொதுவாக திரிபுரசுந்தரி தேவி மிகவும் அழகானவள். என்றும் இளமை தரும் பதினாறு வயதானவள். ஆனால் ஆலயத்தின் உள்ளே உள்ளது காளி தேவி உருவிலான சிலை. அதுவும் இரு சிலைகள் முறையே இரண்டடி உயரத்திலும், ஐந்தடி உயரத்திலும் உள்ளன. ஒன்றை சிறிய தேவி எனவும் மற்றதை பெரிய தேவி எனவும் அழைக்கின்றனர். சிறிய சிலையை முன் காலத்தில்

வெளியூர்களுக்கு செல்லும் பொழுதும், யுத்தத்தின் பொழுதும் தங்களுடன் அந்த நாட்டு மன்னர்கள் எடுத்துச் சென்றனர் எனக் கூறப்படுகின்றது.

திரிபுரசுந்தரி தேவி பற்றி உள்ள பல கதைகளில் சில பண்டிதர்கள் கூறிய ஒரு கதை இது. முன்னொரு காலத்தில் தாரகாசுரன் என்ற அரக்கன் இருந்தான். அவனுக்கு மூன்று குணங்களான - ரஜஸ், தமஸ், சத்வ ஆகியவற்றை குறிக்கும் வகையில் மூன்று புதல்வர்கள் இருந்தனர். அவர்கள் சிவபெருமானிடம் தம்மை அழிக்க முடியாத வரத்தைக் கேட்டுப் பெற்று பறக்கும் தங்க,வெள்ளி மற்றும் இரும்பிலான மூன்று நகர்களை உருவாக்கி, அதில் இருந்தபடி தேவர்களை துன்பப்படுத்தி வந்தனர். அவன் கொடுமைகளை சிவபெருமானிடம் சென்று தேவர்கள் எடுத்துக் கூறிய பொழுது அவர்கள் மூவரையும் சிவபெருமான் அழித்தார். அந்த மூன்று குணங்களைக் கொண்ட அசுரர்களை அழித்தவரை மணந்ததினாலும், மூன்று உலகிலும் - தங்க, வெள்ளி மற்றும் இரும்பிலான மூன்று உலகையும் சேர்த்து - அவள் அழகுக்கு நிகரானவள் எவரும் இல்லை என்பதினாலும், திரிபுரசுந்தரி ( திரிபுர என்றால் மூன்று) என்ற ரூபத்தை அடைந்து இங்கு குடி கொண்டுள்ளாள். இன்னொரு விளக்கத்தின்படி மூன்று குணங்களை அழித்தவருடைய மனைவி என்பதினால் திரிபுரசுந்தரி தேவி என்பவள் மூன்று குணங்களுடன் கூடிய அதி சுந்தரமான அழகைப் பெற்றவள் என்ற பெயர் ஏற்பட்டது. இது புதிய செய்தியாக இருந்தது. ஆமாம் திரிபுரசுந்தரி ஆலயத்தில் எப்படி காளி தேவி சிலையாக இருக்க முடியும் என வினவிய பொழுது ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஒரு பத்திரகாளி கோவிலில் பத்ரகாளியை மந்திரங்களினால் உருயேற்றி மிக அழகிய ரூபத்தில் மெருகேற்றி

திரிபுரசுந்தரியாக பூஜிப்பதாக கூறினர். அது உண்மை எனில் மிகவும் வியப்பான செய்தியே!

திரிபுரசுந்தரி தேவி ஏன் அவதாரம் எடுத்தாள்? ஒரு கிராமியக் கதையின்படி சிவபெருமானுடைய கவனத்தை கலைத்த காமனை அவர் எரித்தவுடன் அந்த சாம்பலை எடுத்த தேவர்கள் அது மீண்டும் மன்மதனாகட்டும் என நினைத்து ஒரு உருவம் தந்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்பிற்கு மாறுதலாக அந்த உருவம் ஒரு பயங்கரமான அசுரனாயிற்று. அவன் சிவபெருமானிடம் சென்று பல வரங்களைப் பெற்று தேவர்களை துன்புறுத்தினான். அவன் சிவபெருமானுடைய ஆசியை பெற்று இருந்ததினால் அவனை அழிக்க முடியாமல் போன தேவர்கள் சிவபெருமானையே வேண்ட அவர் தன்னுடைய மூன்று குணங்களை கொண்டு காளி தேவியின் அவதாரமான திரிபுரசுந்தரி தேவியை படைக்க அவள் அந்த அசுரனை வதம் செய்தாளாம்.

இன்னொரு கிராமியக் கதையின்படி 15 ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் திரிபுராவை ஆண்ட மன்னர் ஒருவருக்கு ஒருமுறை கனவில் தோன்றிய திரிபுரசுந்தரி தேவி உதய்பூர் நகருக்கு அருகிலுள்ள மலையடிவாரத்தில் உள்ள ஆலயத்தில் தன்னை பிரதிஷ்டை செய்து வழிபடுமாறு கூறினார். ஆனால் அந்த மலையின் அடிவாரத்தில் பகவான் விஷ்ணுவிற்கு ஒரு ஆலயம் ஏற்கனவே அமைந்து இருந்தது என்பதினால் விஷ்ணுவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒஆலயத்தில் எப்படி சக்தியின் சிலையை அமைக்க முடியும் என்பதை தீர்மானிக்க முடியாமல் குழப்பத்தில் இருந்தார். மீண்டும், மீண்டும் யோஜனை செய்தவருக்கு தெளிவு ஏற்பட்டது. பகவான் விஷ்ணுவும் சக்தி தேவியும் பரபிரும்மனின் வெவ்வேறு வடிவங்கள் என்பதை புரிந்து கொண்டு அங்கு

அவளுக்கும் சிலை வைத்து வழிபடலானார். அப்படியாக இந்த ஆலயம் சைவ மற்றும் வைஷ்ணவ சமயங்களின் ஒற்றுமைக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கும் வகையில் அமைந்தது.

# Tripurasundari Devi Temple

## Santhipriya



A temple for Goddess Tripurasundari has been built several hundred years ago in the State of Tripura which is in the Northern part of India. She is also known as Goddess Shodashi Devi. The temple in Tripura which is one out of the fifty one Shakthi Peedas established in the world so far, is situated three KM from a place

called Udaipur in Tripura and 58 KM from Agarthala another city. It is believed that 400 years back this temple got damaged in lightening and the same was later renovated and restored by a ruler of Tripura.

Generally Goddess Tripurasundari is associated with  Maha Vidya, a powerful Mantra in Lalitha Sahasranama. In Soundaryalahiri (composed by Adi Sankaracharya) she is portrayed as a sixteen year young girl while no such mention appears in the story pertaining to Shodashi. But the Goddess in Tripura temple is not associated with the Tripurasundari of Lalitha Sahasranama. One of the stories related to this temple is that angered with the insult meted out to her husband by her father Dakshan, Goddess Parvathi committed suicide by jumping into the sacred fire.  Lord Shiva carried Parvathi's corpse on his shoulders and ran dancing uncontrollably all around the world for days. In order to calm down Lord Shiva, immediately Lord Vishnu used his Chakrayutha to cut Goddess Parvathi's body into pieces, which fell at several places which subsequently became Sakthi Peedas. The temple in Tripura came up in Matha puri, a town where Parvathi's right foot fell. Since the structure of the temple looked like a tortoise it was also named as Kuurmasthan.

As per another folk story on the temple at Tripura, long ago there lived an Asura called Tarahasura. He had three sons each of whose characters matched with three aspects namely Tamas, Rajas and Satva. They obtained a boon from Lord Shiva that they cannot be killed by anyone except Lord Shiva, which too in one stroke and therefore constructed three floating cities made of Iron, Gold and Silver and lived there. Due to the boon they got, they became arrogant and started humiliating and torturing every one of the celestial. Unable to bear the tortures, the deva ganas ran to Lord Shiva and complained of the unbearable tortures and ill treatment meted out by the three sons of Tarahasura. Lord Shiva got annoyed with the arrogance of the three sons of Tarahasura and destroyed them in one stroke. Since Goddess Parvathi helped Lord Shiva to destroy the three asuras with three aspects of life - Rajas, Tamas and Satva, and no female equaled to the beauty of Goddess Parvathi anywhere in the three parts of universe visa, Padal log, Bholog and Brahma log, she came to be accepted as Tripura Sundari representing the three aspects and three worlds. The name of the temple in Tripura where she resided at that time thus became Tripurasundari.

Though it is believed that Tripurasundari was a sixteen year beautiful girl she appears in the form of two Kali Devi in the

Tripura temple. Two idols have been consecrated inside, one of them called Choati Matha that is younger Devi and the other as Badi Matha that is elder Devi. One of the Devis measure two feet and the other five foot. When someone wondered how could a Kali Devi be termed as Tripurasundari , they were told that in a famous Bhadrakali temple in Andhra Pradesh ( Southern state in India ), the Kali devi has been beautified by invoking special mantras and worshipped in the form of Tripurasundari. The Choti Matha used to be carried by the rulers of Tripura whenever they went out of their country or to the battle field at the time of war.

Why did Tripura Sundari manifest? An interesting folk tale narrates the story thus. When Manmatha disturbed the tapas of Lord Shiva, he was burned to ashes with Shiva’s third eye. The devas carefully collected the ash and brought it to life. Instead of becoming Manmatha, it turned out to be an asura who went to Lord Shiva and took several boons. Thereafter he started troubling the celestials. When his tortures went beyond control, the deva ganas went to Lord Shiva and prayed for their protection and to save them from the acts of the asura created by them. Lord Shiva too converted Goddess Parvathi to look like Kali Devi and powered her

with three aspects of himself to destroy the asura. After she killed the asura she manifested as Tripurasundari.

According to one more legend, The Goddess appeared in the dream of one of the Kings in 15th Century who was the ruler. She told him to worship her in the temple which exited by the side of a hill in Udaipur. The King was confused how he could install the idol of the Devi since the temple referred to be a temple for Lord Vishnu. However when he realized that Lord Vishnu and Goddess Parvathi were same manifestations from Parabrahman, there was no harm in worshipping both Goddess Tripurasundari and Lord Vishnu in the same temple as symbol of unity of Shaiva and Vaishnavite sects. Thus came the Goddess Tripurasundari temple there.